# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண். 20/ந/2025, நாள் 02.01.2026

R.Ma. பார்த்திபன், மன்னார்குடி,
திருவாரூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையாளர்,
மன்னார்குடி நகராட்சி, மன்னார்குடி,
திருவாரூர் மாவட்டம். – எதிர்மனுதாரர்

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி, ஆசாத்தெரு, எண்.53/1, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R.Ma. பார்த்தீபன் என்பவரது 19.12.2024 நாளிட்ட புகார் மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 19.12.2024 அன்று பெறப்பட்டு, 20/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி, ஆசாத்தெரு, எண்.53/1, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R.Ma. பார்த்தீபன் என்பவரது 19.12.2024 நாளிட்ட புகார் மனுவுடன் இணைக்கப்பட்டுள்ள முறையீட்டில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

"1) **Location of the Illegal and Unauthorized Construction**: At the Municipal Administrative limits, designated by Town survey numbers 2137 – 1 and 2138-1 at Melavasal Ward (Town) Block 36, RCC building has been constructed without building permissions and not even a single paise of property tax is levied. There is also an unapproved information that the illegal occupant is /has been municipal staff / worker and presently not in service Electrical and drinking water connections have been illegally obtained. Municipality is aware of these information.

2) **Lack of Action by Municipality**: It raises serious concerns about the municipality's role in protecting riverbanks, especially considering their apparent inaction towards unapproved buildings and constructions in Government river poromboke land within municipal limits. Despite several complaints, there has been no effective intervention to address these issues.

3) **Further Encroachment Activities**: This lack has led the encroachers encouraged and they have installed bore well tanks to municipality inaction, created coconut grove etc. Also new encroachers have started identifying places for further encroachment as theirs, which to your astonishment, means another encroacher can not occupy that place since they are the rightful illegal encroachers. It appears that, with the tacit approval of municipality officials, further encroachments are being

attempted. Had there been a single action, the encroachment would have been stopped. I strongly urge the municipality to install clear and prominent signage stating that such encroachments are prohibited.

4) **Ineffectiveness of Complaints**: The responses from the municipality regarding complaints have been unsatisfactory, often treated as mere name sake formalities (herein-in-after "paper sadangu") without any real action taken. This indicates a troubling complicity or negligence on the part of the officials. When a common man need to pay property tax etc. how does encroachers are able to construct building on a river land without municipal authorities are hand in glove is to be sincerely thought.

5) **Continued Attempts at Encroachment**: There are ongoing attempts by encroachers to extend their activities, including the grove.

6) **Demand for Immediate Action**: I request immediate action to remove these encroachments. If these illegal constructions are not removed prior to any investigations, I will hold the concerned municipal officials accountable for their inaction.

Prayer:

1. Necessary action on illegal construction at the survey number 2137-1 and 2138-1, Illegal encroachment has to be initiated without any further delay.
2. I request that the Municipality submit before and after photographs of the site during the removal of encroachments.
3. I humbly pray to direct the municipality to ensure the illegal encroachments are removed in these survey numbers, FOLLOWING UP with whatever Government departments involved and to ensure the closure of the complaint instead of 'paper sadangu'.

2) மனுதாரரது புகார் குறித்து, மன்னார்குடி நகராட்சி ஆணையரிடம் இம்முறைமன்ற நடுவத்தின் 25.01.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் அறிக்கை கோரப்பட்டது.

3) மன்னார்குடி நகராட்சி ஆணையர், தனது கடித ந.க.எண்.2558/2024/எப்1 நாள் 01.08.2025–ன் அறிக்கையில் கீழ்க்கண்ட விவரங்களை தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றம் விசாரணை அழைப்பாணையில் (Summons) 05.08.2025–ந்தேதி நேரில் ஆஜராகி அறிக்கை அளிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இடம் நேரில் ஆய்வு செய்யப்பட்டது. மேற்படி, புலஎண். 2137/2, 2138/2 தனியருக்கு பாத்தியப்பட்ட நிலமாகும். மேற்படி புல எண்கள் புகார்தாரர் ஆற்று புறம்போக்கு என தவறுதலாக புகார் மனுவில் தெரிவித்துள்ளார்.

தனியருக்கு பாத்தியப்பட்ட பட்டா இடத்தினை புகார்தாரர் திரு. R.Ma. பார்த்தீபன், ஏதோ உள்நோக்கத்துடன் அரசிற்கு சொந்தமான இடம் என தெரிவித்து உள்ளார்.

வார்டு எண்.1, பிளாக் 36, நகரளவு எண்.2137/1 மற்றும் 2138/1 சர்வே ஆவணங்களில் பாமனி ஆறு என உள்ளது. மேற்படி, பாமனி ஆற்று கரையில் கூரை கட்டிடம் கட்டி உள்ளதால், ஆற்று கரையோரம் கட்டப்படும் கட்டிடத்திற்கு சம்மந்தப்பட்ட பொதுப்பணித்துறை நீர்வளத்துறை (W.R.O.) மூலம் நடவடிக்கை எடுக்க இயலும். நகராட்சியால் பிற துறையினருக்கு சொந்தமான இடத்தில் கட்டப்படும் கட்டிடத்திற்கு நடவடிக்கை மேற்கொள்ள வழிவகை இல்லை.

சம்மந்தப்பட்ட புகார்தாரர் பொதுப்பணிதுறையில் முறையீடு செய்யாமல் வேண்டும் என்றே மன்னார்குடி நகராட்சி மீது தொடர் புகார் முறையீட்டு மன்றத்தில் கொடுத்து வருகிறார்.

சம்மந்தப்பட்ட திரு. R.Ma. பார்த்தீபன் மற்றும் அவரது மனைவி பெயரில் தொடர்ந்து தகவல் பெறும் உரிமை சட்டம், முதலமைச்சர் தனிப்பிரிவு, உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றம் என தொடர்ந்து புகார் அளித்து வருவதால், நகராட்சி பகுதிகளில் உள்ள அத்தியாவசிய பணிகளான குடிநீர், தெருவிளக்கு, தூய்மை பணிகள், சாலை வசதிகள் பணிகளுக்கு செலவிட கூடிய நேரம் குறைந்து அன்னாரின் மனுவிற்கு பதில் அளிப்பதே நகராட்சி வேலையாக உள்ளது.

எனவே, மாண்புமிகு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்கள் நியாயமான எனது பதிலை ஏற்று, மன்னார்குடி நகராட்சியினை மேற்படி புகாரிலிருந்து விடுவிக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.".

4) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான மன்னார்குடி நகராட்சி ஆணையர் ஆகியோரை 05.08.2025அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 24.07.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் திரு. R.Ma. பார்த்தீபன், என்பவர் 05.08.2025 அன்று நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராகவில்லை. மனுதாரர் தனது 05.08.2025 நாளிட்ட மின்னஞ்சலில் தனக்கு உடல் நிலை சரியில்லாததால், தொலைதூர பயணம் செய்ய இயலாத நிலையில் உள்ளேன் என தெரிவித்து விசாரணையை வேறு தேதியிட்டு வழங்குமாறு கோரியிருந்தார்.

6) எதிர் மனுதாரரான மன்னார்குடி நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.2558/2024/எப்1, நாள் 04.08.2025–ல் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாம் 05.08.2025 அன்று நடைபெற உள்ளதால், 05.08.2025 அன்று நடைபெற உள்ள விசாரணைக்கு நகராட்சி நகரமைப்பு ஆய்வாளரர் திரு. ரா.கண்ணதாசன் என்பவரை அனுமதிக்குமாறு கேட்டுக்கொண்டதைத்தொடர்ந்து, நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் திரு.ரா.கண்ணதாசன் என்பவர் 05.08.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ள மேலவாசல் வார்டு (டவுன்) பிளாக் 36–ல் உள்ள டவுன் சர்வே எண்கள். 2137–1 மற்றும் 2138–1–ல் ஆர்சிசி கட்டிடம் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள கட்டிடம், பொது பணித்துறைக்கு சொந்தமான இடத்தில் ஏசிசி கட்டிடம் அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடம் நகராட்சிக்குப்பட்ட இடத்தில் அமைய பெறவில்லை என்பதை பணிவுடன் இம்முறை நடுவத்திற்கு சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

ஆக்கிரமிப்பிற்குள்ளான இடம் பொது பணி துறைக்கு சொந்தமான இடமாக உள்ளதால் நகராட்சியால் சொத்துவரி ஏதும் விதிக்கப்படவில்லை. மேற்படி ஆக்கிரமணம் குறித்து பொதுப்பணித் துறைக்கு இதுநாள் வரை தகவல் நகராட்சியால் தெரிவிக்கப்படவில்லை.

சட்ட விரோத ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள இடத்தினை அகற்ற பொது பணித்துறை மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரம் இதன் மூலம் பணிந்து வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

7) மனுதாரரின் 05.08.2025 நாளிட்ட மின்னஞ்சலில் 05.08.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் தன்னால் ஆஜராக இயலவில்லை என தெரிவித்து மாற்று தேதியை வழங்குமாறு கேட்டுக்கொண்டதற்கிணங்க மனுதாரருக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு அளிக்கும் பொருட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான நகராட்சி ஆணையர் ஆகியோரை 25.09.2025 அன்று நடைபெற உள்ள விசாரணைக்கு வருமாறு 18.09.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

8) மனுதாரர் திரு. R.Ma. பார்த்தீபன் 25.09.2025–ல் நடைபெற்ற விசாரணையில் இம்முறைமன்ற நடுவர் முன்பு நேரடியாக ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

"மன்னார்குடி நகராட்சிக்குப்பட்ட மேலவாசல் வார்டு (டவுன்) பிளாக் 36–ல் டவுன் சர்வே எண்.2137–1 மற்றும் 2138–1ல் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள ஆர்சிசி கட்டிடத்திற்கு சொத்துவரி வசூலிக்கப்படுவதில்லை. இக்கட்டிடத்திற்கு மின்சாரம் மற்றும் குடிநீர் இணைப்புகள் சட்ட விரோதமாக பெறப்பட்டுள்ளது. இவ்விடத்தில் முன்னாள் நகராட்சி ஊழியர்கள் ஆக்கிரமித்துள்ளனர் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மன்னார்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட அரசு ஆற்று புறம்போக்கு நிலத்தில் அங்கீகரிக்கப்படாத கட்டிடங்கள் மற்றும் கட்டுமானங்கள் கட்டப்பட்டுவருவது குறித்த நகராட்சியில் அளிக்கப்பட்ட புகார்களுக்கு நகராட்சியால் நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை எனவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆற்றங்கரை புறம்போக்கு நிலத்தில் ஆக்கிரமிப்பாளர்கள் கடைகள் கட்டி வாடகைக்கு விட்டுள்ளனர். ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்ட கட்டிடங்களுக்கு நகராட்சியால் வரி கேட்பு வழங்கப்பட்டு வரி வசூல் செய்கின்றனர். வரி கட்டிய ரசீதினைக் கொண்டு ஆக்கிரமிப்பாளர்கள் மின் இணைப்பு பெற்றுள்ளார்கள். இவ்வாறு இணைப்பு பெற்றவர்கள் விவரம் ஏதும் என்னிடம் இல்லை. ஆனால் புகார் மனுவில் தெரிவித்துள்ளேன் என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே, ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்ற நடவடிக்கை எடுக்கவும், அலட்சியத்தோடு செயல்படும் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்குமாறும், சட்ட விரோத ஆக்கிரமிப்புகளை அகற்ற தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், முறைமன்றத்தால் வெளியிடப்படும் ஆணைகள் மீது நகராட்சியால் நடவடிக்கை எடுக்காத நேர்வில், இதுகுறித்து முறைமன்றத்திற்கும், நகராட்சி நிர்வாக இயக்குநருக்கும் புகார் அளித்து தீர்வு பெற்றுக் கொள்ளலாம் என்ற விவரத்தினையும் அறிந்து கொண்டேன் என்பதை இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

9) எதிர்மனுதாரரான மன்னார்குடி நகராட்சி ஆணையர் 25.09.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகவில்லை.

10) மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான மன்னார்குடி நகராட்சி ஆணையரின் அறிக்கை, நகராட்சி நகரமைப்பு ஆய்வாளரின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தினால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

மன்னார்குடி நகராட்சிக்குப்பட்ட மேலவாசல் வார்டு (டவுன்) பிளாக் 36–ல் டவுன் சர்வே எண்.2137–1 மற்றும் 2138–1ல் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள ஆர்சிசி கட்டிடத்திற்கு சொத்துவரி வசூலிக்கப்படுவதில்லை எனவும், அக்கட்டிடத்திற்கு மின்சாரம் மற்றும் குடிநீர் இணைப்புகள் சட்ட விரோதமாக பெறப்பட்டுள்ளது எனவும், இவ்விடத்தில் முன்னாள் நகராட்சி ஊழியர்கள் ஆக்கிரமித்துள்ளனர் எனவும் மன்னார்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட அரசு ஆற்று புறம்போக்கு நிலத்தில் அங்கீகரிக்கப்படாத கட்டிடங்கள் மற்றும் கட்டுமானங்கள் கட்டப்பட்டுவருவது குறித்து நகராட்சியில் அளிக்கப்பட்ட புகார்களுக்கு நகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை எனவும் தெரிவித்து ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்ற நடவடிக்கை எடுக்கவும், அலட்சியத்தோடு செயல்படும் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்குமாறும், சட்ட விரோத ஆக்கிரமிப்புகளை அகற்ற தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இம்முறைமன்ற நடுவத்தை மனுதாரர் நாடியுள்ளார்.

"மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ள மேலவாசல் வார்டு (டவுன்) பிளாக் 36–ல் உள்ள டவுன் சர்வே எண்கள். 2137–1 மற்றும் 2138–1–ல் ஆர்சிசி கட்டிடம் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள கட்டிடம், பொது பணித்துறைக்கு சொந்தமான இடத்தில் ஏசிசி கட்டிடம் அமைக்கப்பட்டுள்ளது என்பதும் மேற்படி கட்டிடம் நகராட்சிக்குப்பட்ட இடத்தில் அமைய பெறவில்லை என்பதும் ஆக்கிரமிப்பிற்குள்ளான இடம் பொது பணி துறைக்கு சொந்தமான இடமாக உள்ளதால் நகராட்சியால் சொத்துவரி ஏதும் விதிக்கப்படவில்லை என்பதும் மேற்படி ஆக்கிரமணம் குறித்து பொதுப்பணித் துறைக்கு இதுநாள் வரை தகவல் நகராட்சியால் தெரிவிக்கப்படவில்லை என்பதும் சட்ட விரோத ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள இடத்தினை அகற்ற பொது பணித்துறை மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருப்பது மன்னார்குடி நகராட்சி நகரமைப்பு ஆய்வாளரின் வாக்குமூலத்திலிருந்து அறியமுடிகிறது.

இந்நேர்வில், ஆக்கிரமிப்புக்குள்ளான இடம் பொதுப்பணித்துறைக்கு சொந்தமான இடமாக உள்ளதால், சட்ட விரோதமாக ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள இடத்தினை அகற்ற பொதுப்பணித்துறையுடன் இணைந்து உரிய நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளுமாறு மன்னார்குடி நகராட்சி ஆணையரை அறிவுறுத்தி அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள் 2–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. R.Ma. பார்த்திபன்,
53/1, ஆசாத் தெரு, மன்னார்குடி,
திருவாரூர் மாவட்டம் – 614 001

2) நகராட்சி ஆணையர்,
மன்னார்குடி நகராட்சி,
திருவாரூர் மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

4) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்.
இ.கோ/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

5/1/26
செயலாளர்.